www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



இயல் 2

உயிருக்கு வேர்

# பட்டமரம்

– கவிஞர் தமிழ்ஒளி

கவிதைப்பேழை

## கரு

* நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர்.
* இயற்கையின் படைப்பான மரம், செடி, கொடிகளை காத்தனர்.
* நமக்கு உயிர்வளி (ஆக்ஸிஜன்) தருவது மரங்களே.
* மனித வாழ்வில் பெரும் பங்காற்றும் மரங்களை தன் சுயநலத்திற்காக வெட்டக்கூடாது.
* மழை பொய்த்ததால் பட்டுப்போன மரத்தின் குமுறல் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
* மரங்களை பேணிப் பாதுகாப்போம். மரங்களை வளர்ப்போம்.

## ஆசிரியர் குறிப்பு


| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிஞர் தமிழ் ஒளி |
| இயற்பெயர் | : | விஜயரங்கம் |
| புனைப்பெயர் | : | தமிழ்ஒளி, விஜயரங்கம் விஜயன் |
| பெற்றோர் | : | சின்னையா – செங்கேணிஅம்மாள் |
| ஊர் | : | புதுவை – குறிஞ்சிப் பாடியை அடுத்த ஆடூர் |
| படைப்புகள் | : | நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவிகாவியம். |
| காலம் | : | 21.09.1924 - 24.03.1965 |
| சிறப்பு | : | பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர். முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை ஆகிய இதழ்களில் பணியாற்றியுள்ளார். |

## பாடல்

மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே!
வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?
குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்தஇலை!
வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்தனையோ?
கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்
ஓலமி டக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!
பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்
ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

– தமிழ்ஒளி



இயல் 2



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. குந்த – உட்கார | 3. மிசை – மேல் |
| 2. கந்தம் – மணம் | 4. விசனம் – கவலை |

## விளக்கவுரை

பட்டமரமானது தன்னுடைய இலைகள் காய்ந்தும், உதிர்ந்தும் தான் மொட்டை மரமாக இருப்பதனால், தன்னை வெட்டக்கூடிய நாள் விரைவில் வரும் என்பதை எண்ணி கவலை அடைவதாகவும், பெருமூச்சு விடுவதாகவும் தமிழ்ஒளி பட்டமரத்தின் வருத்தங்களை வரிசைப்படுத்தி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

* வெயிலினால் களைத்து வந்தோர்க்கு அமர நிழல் தந்தேன்.
* நல்ல நறுமணம் மிகுந்த மலர்களைத் தர கூரை விரித்து இலையாக உதவினேன். ஆனால் இப்பொழுதே இலைகள் எல்லாம் கருகி உதிர்ந்து சருகாகி விட்டேன்.
* என் பசுமையை இழந்ததால் கட்டை என்னும் பெயர் பெற்று துன்பப்படுகிறேன். எனக்கு உடையாக இருக்கும் என் பட்டை கிழிந்து நான் அழகு இழந்து காணப்படுகின்றேன்.
* காலம் என்னும் புயலால் தாக்கப்படும் மனிதன் ஓலமிட்டு கைநீட்டுவதுபோல் பட்டுப்போன கிளைக் கைகளை நீட்டித் துன்பப்படுகிறேன். அன்றோ,
* பாடித்திரியும் பறவைகள் தினந்தோறும் வந்து என்னை வாழ்த்திப் பாடி ஒலி எழுப்பும்.
* பனிக்காலங்களில் பனிமூட்டம் போர்த்தி அழகாக காட்சி அளிப்பேன்.
* சிறுவர்கள் என் கிளைகளில் ஏறியமர்ந்து குதிரைச் சவாரி செய்வர்.

ஆனால் இன்றோ ஏட்டில் படிக்கக்கூடிய வெறும் கனவாய் என் வாழ்வு ஆகிவிட்டதே என்று பட்டமரம் வருத்தியதாக கவிஞர் தமிழ் ஒளி குறிப்பிடுகிறார்.

## பிரித்து எழுதுக

1. இன்றியமையாதது – இன்றி + அமையாதது
2. பட்டுப்போன – பட்டு + போன
3. பனித்திரை – பனி + திரை
4. வெறுங்கனவு – வெறும் + கனவு
5. புவிக்கொரு – புவிக்கு + ஒரு

## இலக்கணக்குறிப்பு

1. வெந்து, வெம்பி, எய்தி – வினையெச்சங்கள்
2. மூடுபனி – வினைத்தொகை
3. ஆடுங்கிளை – பெயரெச்சத் தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **விரித்த** – விரி + த் + த் + அ | **குமைந்தனை** – குமை + த்(ந்) + த் + அன் + ஐ |
| விரி – பகுதி | குமை – பகுதி |
| த் – சந்தி | த் – சந்தி, ந் – ஆனது விகாரம் |
| த் – இறந்தகால இடைநிலை | த் – இறந்தகால இடைநிலை |
| அ – பெயரெச்ச விகுதி | அன் – சாரியை |
| | ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

உயிருக்கு வேர்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## மதிப்பீடு - புத்தக வினா

**பலவுள் தெரிக** கேள்வி எண்: 1

**1. 'மிசை' – என்பதன் எதிர்ச்சொல் என்ன?**

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

விடை: அ) கீழே

### கூடுதல் வினாக்கள்

**1. கவிஞர் தமிழ்ஒளி பிறந்த ஊர் ............. .**

அ) தேனி ஆ) புதுச்சேரி இ) சிதம்பரம் ஈ) மதுரை

**2. விசனம் என்பதன் பொருள் ............. .**

அ) மணம் ஆ) மகிழ்ச்சி இ) கவலை ஈ) இன்பம்

**3. மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாதது...................**

அ) மரம் ஆ) விலங்கு இ) நெகிழி ஈ) கனிமவளம்

**4. மூடுபனி என்பதன் இலக்கணக் குறிப்பு...................**

அ) வினைத்தொகை ஆ) பெயரெச்சத்தொடர்
இ) உருவகம் ஈ) உவமைத்தொடர்

**5. கவிஞர் தமிழ் ஒளி யாருடைய மாணாக்கர்?**

அ) சுரதா ஆ) பாரதிதாசன் இ) பாரதி ஈ) திரு.வி.க

**6. வெறுங்கதையானது என பட்டமரம் வருந்தக் காரணம்..............**

அ) பசுமை இழந்ததால் ஆ) இலைகள் கருகியதால்
இ) புயல் தாக்கத்தால் ஈ) இலைகள் உதிர்ந்ததால்

**7. உடையாக இருந்த மரப்பட்டைகள் கிழிந்ததால் மரம் இழந்தது...................**

அ) அதன் அழகு ஆ) அதன் இலைகள்
இ) பறவைகள் ஒலி ஈ) சிறுவர் விளையாட்டு

**8. பாரதியாரின் வழித்தோன்றலாக இருந்த கவிஞர்...............**

அ) தேனரசன் ஆ) தமிழ்ஒளி இ) ந. பிச்சமூர்த்தி ஈ) குழந்தை

விடைகள் :
1. ஆ) புதுச்சேரி 2. இ) கவலை 3. அ) மரம்
4. அ) வினைத்தொகை 5. ஆ) பாரதிதாசன்
6. இ) புயல் தாக்கத்தால் 7. அ) அதன் அழகு 8. ஆ) தமிழ்ஒளி

## மதிப்பீடு - புத்தக வினா

**சிறுவினா** கேள்வி எண்: 4

**4. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?** ※

(i) இலைகளெல்லாம் உதிர்ந்து மொட்டைக் கிளையாக நின்று பெருமூச்சு விடுகின்றது பட்ட மரம்.

(ii) தன்னை வெட்டக்கூடிய ஒருநாள் வருமென்று கவலை அடைந்தது. மக்கள் உட்காருவதற்கும் நறுமணம் கமழும் மலர்கள் தருவதற்கும் கூரை போன்று விரிந்த இலைகள் வெந்து கருகி நிறம் மாறிவிட்டதற்கு வருந்துகிறது.

(iii) மரம் பசுமையிழந்ததால் கட்டை என்னும் பெயர் பெற்று கருகிவிட்டது. உடையாக இருந்த மரப்பட்டைகள் கிழிந்ததால் அழகை இழந்தது.

(iv) புயலின் தாக்கத்தால் துன்பப்பட்டது. பாடுகின்ற பறவைகள் மரத்தைப் பார்த்து பாடல் பாடியதும், ஆடுகின்ற கிளையின் மீது சிறுவர்கள் விளையாடியதும் வெறுங்கதையானது என எண்ணி பட்ட மரம் வருந்தியது.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net www.surabooks.com

## கற்பவை கற்றபின்

**1. விளைநிலங்கள் கட்டடங்களாகின்றன - என்னும் தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசுக.**

வணக்கம்! வளர்ந்து வரும் நாகரிக இயந்திர வாழ்க்கை முறையால் அழிந்து கொண்டே இருக்கும் விளைநிலங்களைப் பற்றிக் கூறவிருக்கிறேன்.

விளைநிலங்களெல்லாம் கட்டடங்களாக மாற்றியதற்கான காரணம் தெரியுமா உங்களுக்கு? செல்வந்தர்களும் தொழிலதிபர்களும் தங்களுடைய பணத்தை முதலீடு செய்வதற்கு விளைநிலங்களை வாங்கினர். ஆரம்ப காலத்தில் ஒரு சிலர் அதில் விவசாயம் செய்தனர். பிறகு அதனைப் பராமரிக்க இயலாமல் அப்படியே விட்டனர். நான்கைந்து ஆண்டுகள் பயிர் செய்யவில்லையென்றால் அது விவசாயத்திற்கு உகந்ததில்லை என்ற சான்றிதழைப் பெற்றுவிடலாம். அவ்வாறு பெற்றுக் கொண்டு பெரிய பெரிய கட்டடங்களை உருவாக்கினர்.

இந்நிலை உருவானதற்குக் காரணம் நம் விவசாயிகள்தான். அவர்கள் கூறும் பழமொழி என்ன தெரியுமா? 'உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது'. இதையே சொல்லிக் கொண்டு விவசாயத்தில் ஆர்வம் காட்டவில்லை. தங்களுடைய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகாத விலை, இடுபொருள்களின் விலை உயர்வு, வறட்சி எனப் பன்முனைத் தாக்குதல் இக்காரணங்களைக் கூறி தங்களுடைய விளைநிலைங்களை விற்று வங்கியில் வைப்புத் தொகையாகப் போட்டுவிட்டு நகரத்திற்கு வந்து ஏதோ ஒரு வேலையைச் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என நகரத்தை நோக்கி இடம் பெயர்ந்தனர். 'உழைப்பில்லாமல் ஊதியமில்லை' என்பதை மறந்த விவசாயிகள் தங்களின் இட மாற்றத்திற்கான காரணமாகக் கூறுவது நகைப்புத்தான் வருகிறது. "ஏரிப் பாசனம் குறைந்துவிட்டது.

அதனால் நெல், கரும்பு போன்ற பயிர்கள் வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அதனால் நிலங்களை விற்றுவிடுகிறோம். விற்பதை விடுத்து, திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்து கூடுதல் விளைச்சல் பெறுவதற்கு வழி செய்யலாமே. அதற்கும் ஒரு முட்டுக்கட்டை போடுவார்கள். அது என்னவெனில் மழை 'பெய்யாமலும் கெடுக்கும் பெய்தும் கெடுக்கும்' ஆம் பருவமழை மாற்றத்தின் காரணமாக பயிர் செய்ய இயலவில்லை. உற்பத்தி செய்வதற்கான செலவு கூடுதலாகிறது. அதைவிடக் கூலிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. நகர்ப்புறத்திற்குச் சென்று வேலை செய்தால் மாதா மாதம் இவ்வளவு தொகை என்று தொடர்ந்து வருமானம் வரும் என்று எண்ணுவதால் வயல்களில் வேலை செய்ய ஆட்கள் வருவதில்லை. இக்காரணங்களினால்தான் விளைநிலங்கள் விற்கப்படுகின்றன.

வேளாண் தொழில் சிறப்பாக வளர வேண்டும். வேண்டுமெனில் விளைநிலங்கள் கட்டடங்களாக மாறுவதைத் தடுக்க வேண்டும். விவசாயம் சார்ந்த தொழில்கள் வளர வேண்டும். விவசாயத் துணைத் தொழிலான கால்நடை வளர்ப்பு அதிகரிக்க வேண்டும். விளைபொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் நிலை வரவேண்டும்.

மிளகாய் அதிகம் விளையும் இடங்களில் மிளகாய்ப் பொடித் தொழிற்சாலையும், பழங்கள் அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் பழக்கூழ் தொழிற்சாலையும், மல்லிகைப்பூ அதிகம் கிடைக்கும் இடங்களில் வாசனைத் திரவியங்கள் தொழிற்சாலையும் விவசாயிகளால் தொடங்கப்பட வேண்டும். துல்லிய பண்ணைத் திட்டத்தின் மூலம் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

பருவமழை தவறுகிறது. நிலம் வெப்பமயமாகி விட்டது. அதனால் பயிர் செய்ய இயலவில்லை என்று கூறுவதை விடுத்து பயிர் செய்வதற்கு ஏற்ற நிலையை உருவாக்க வேண்டும். நெடுஞ்சாலைகளில் பெரிய பெரிய கட்டடங்களைத் தவிர்த்து மரங்களை வளர்த்து நிலமகளுக்குப் பசுமைப் போர்வையைப் போர்த்துவோம். இதனால் பருவமழை தவறாத சூழல் ஏற்படும். பூமியும் தண்மையில் மகிழ்ச்சியுறும். பெரும் முதலீட்டைப் போட்டு நிலம் வாங்கும் தொழிலதிபர்களும் செல்வந்தர்களும் உங்கள் சந்ததியினருக்கு அரண்மனை போன்று வீடு கட்ட நினைக்காமல், அந்நிலத்தில் மரப் பயிர்கள் வளர்த்து அவர்கள் வளமாய் நோயின்றி வாழ வழி செய்ய வேண்டும்.

நன்றி!





www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 45 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு
இ) இலஞ்சி ஈ) புலரி

2. 'மிசை' – என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே
இ) இசை ஈ) வசை

3. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம்
இ) வளம் ஈ) பெரிய

4. இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்
அ) ஜி.யு.போப் ஆ) சர் ஆர்தர் காட்டன்
இ) சீகன் பால்க் ஈ) ஜான் பென்னிகுவிக்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
6. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே-குறிப்பு தருக.
7. மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழற்
காடும் உடையது அரண் – இக்குறள் கூறும், நாட்டின் அரண்கள் யாவை?
8. பொருண்மொழிக் காஞ்சித்துறையை விளக்குக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

9. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.
10. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
11. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'காடெல்லாம்' எனத் தொடங்கும் 'பெரியபுராணம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளிக்க. (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.
14. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

☆☆☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



இயல் 5

கசடற மொழிதல்

# சிறுபஞ்சமூலம்

– காரியாசான்

கவிதைப்பேழை

## கரு

* சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து அறக்கருத்துகளைக் கூறும் நீதி நூல்கள் தோன்றின. இந்நூல்கள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.
* நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர் வயதில் இளையவராக இருந்தாலும் அவர் மூத்தவரோடு ஒப்பாவார்.
* மேதையர் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்வர் என்ற கருத்தை விளக்குவது இச்சிறுபஞ்சமூலம் பாடல்.

## ஆசிரியர் குறிப்பு

**ஆசிரியர்** : காரியாசான்

**இயற்பெயர்** : 'காரி'

'ஆசான்' என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.

இவர் மதுரை தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர்.

'மாக்காரியாசன்' எனப் பாயிர செய்யுள் சிறப்பிக்கிறது.

**சமயம்** : சமணம்.

**சமகாலத்தவர்** : கணிமேதாவியார் (காரியாசனும், கணிமேதாவியாரும் ஒரு சாலை மாணாக்கர் ஆவர்)

## நூற் குறிப்பு

தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

## பாடல்

### அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு. (பா.எண்-22) – காரியாசான்



**அணி :**

பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம் :**

ஒரு பொருளை அதன் தன்மைகொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக்கூறும்பொழுது அவற்றின் இடையே உவம உருபு இல்லாமல் ஒப்பிட்டுக்கூறுவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## மதிப்பீடு - புத்தக வினா

### பலவுள் தெரிக

கேள்வி எண்: 1, 5

1. பொருத்தமான விடையைத் தேர்க. ※

| | | | |
|---|---|---|---|
| அ) | சிறுபஞ்சமூலம் | - 1. | காப்பிய இலக்கியம் |
| ஆ) | குடும்ப விளக்கு | - 2. | சங்க இலக்கியம் |
| இ) | சீவகசிந்தாமணி | - 3. | அற இலக்கியம் |
| ஈ) | குறுந்தொகை | - 4. | தற்கால இலக்கியம். |

க) அ-3, ஆ- 4, இ -1 ஈ- 2 உ) அ-2, ஆ- 3, இ -1 ஈ- 4
ங) அ-3, ஆ- 1, இ - 4 ஈ- 2 ச) அ-4, ஆ- 1, இ -2 ஈ- 3

**விடை: க) அ-3, ஆ- 4, இ -1 ஈ- 2**

5. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது? ※
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

**விடை: ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை**

### கூடுதல் வினாக்கள்

1. ஆசான் என்பது .............. அடிப்படையில் அமைந்த பெயராகும்.
அ) கற்பித்தல் ஆ) தொழில் இ) கற்றல் ஈ) பண்பு

2. மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா - என்ற வரியில் தாவா என்பதன் பொருள் .............. .
அ) கெட்டுப்போதல் ஆ) அழிந்து போதல்
இ) கெடாதிருத்தல் ஈ) விதைக்காமல் இருத்தல்

3. பூவாது காய்க்கும் மரம் உள: நன்று அறிவார் என்னும் பாடலில் அமைந்துள்ள அணி.................
அ) இல்பொருள் உவமையணி ஆ) உருவக அணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமையணி

4. <u>விதையாமை</u> நாறுவ வித்து உள - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு...........
அ) தொழிற்பெயர் ஆ) உருபு மயக்கம்
இ) மூன்றாம் வேற்றுமைத் தொகை ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்

5. சிறுபஞ்ச நூலில் ஒவ்வொரு பாடலிலும் உள்ள கருத்துகள்...................
அ) ஐந்து ஆ) ஆறு இ) எட்டு ஈ) பத்து

6. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றியவை...................
அ) பதினென் மேற்கணக்கு நூல்கள் ஆ) சிற்றிலக்கியங்கள்
இ) நீதி நூல்கள் ஈ) காப்பிய நூல்கள்

7. சிறுபஞ்ச மூலப் பாடல்கள் எடுத்துக்காட்டும் வாழ்வியல் உண்மைகளின் வகைகளுள் பொருந்துவது..............
அ) நன்மை தருவன ஆ) தீமை தருவன
இ) நகைப்புக் குரியன ஈ) இவை அனைத்தும்

8. அரசவையில் 'பாரதி' என்னும் பட்டம் பெற்ற போது பாரதியாரின் வயது.................
அ) 10 ஆ) 11 இ) 15 ஈ) 16

9. பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்த போது கலிலியோவின் வயது......................
அ) 17 ஆ) 15 இ) 18 ஈ) 19





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**10.** **காரியாசானின் இயற்பெயர்..................**

அ) பாரி ஆ) ஆய் இ) காரி ஈ) காலீ

**11.** **மாவீரன் அலெக்சாண்டர் 16 ஆவது வயதில் தமது தந்தையின் போர்ப்படையின் .................... ஆனார்.**

அ) சேவகன் ஆ) ஒற்றன் இ) தளபதி ஈ) எதிரி

**12.** **பதினெண் கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ள அற நூல்களில் உள்ள கருத்துகள்..................**

அ) ஐந்து ஆ) ஆறு இ) பத்து ஈ) எட்டு

**13.** **15 வது வயதில் பிரெஞ்சு இலக்கிய கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர்....................**

அ) பாரதியார் ஆ) பிரளயன் இ) சிங்கிஸ் ஐத்மாத்தவ் ஈ) விக்டர் ஹியூகோ

---

விடைகள் :
1. ஆ) தொழில்
2. இ) கெடாதிருத்தல்
3. ஈ) எடுத்துக்காட்டு உவமையணி
4. ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்
5. அ) ஐந்து
6. இ) நீதி நூல்கள்
7. ஈ) இவை அனைத்தும்
8. ஆ) 11
9. அ) 17
10. இ) காரி
11. இ) தளபதி
12. ஆ) ஆறு
13. ஈ) விக்டர் ஹியூகோ

---

## மதிப்பீடு - புத்தக வினா

**குறுவினா** கேள்வி எண்: 2

**2.** **மூவாது மூத்தவர், நூல் வல்லார் – இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.**

(i) பூக்காமலேயே சில மரங்கள் காய்ப்பதுண்டு.

(ii) இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும் அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவரே ஆவார்.



## கூடுதல் வினாக்கள்

**1.** **அறிவுடையார் தாமே உணர்வர். இக்கூற்றினைச் சிறுபஞ்சமூலம் வழி விளக்கம் தருக.**

(i) பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு.

(ii) இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர்; வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார்.

(iii) பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன.

(iv) அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையுமே தாமே உணர்ந்து கொள்வர்.

**2.** **சிறுபஞ்சமூலம் – குறிப்பு வரைக.**

(i) தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம்.

(ii) ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது.

(iii) அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

(iv) இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## மொழியை ஆள்வோம்

### மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"
Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".
"How can you be so sure?" asked Akbar.
Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was pleased very much by Birbal's wit.

**விடை:** அக்பர், "இந்த நகரத்தில் எத்தனை காகங்கள் உள்ளன?" என்று கேட்டார்.
நொடிப்பொழுதும் சிந்திக்காமல் பீர்பால் "ஐம்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது காகங்கள் உள்ளன" என பதிலளித்தார்.
"நீ எப்படி உறுதியாகக் கூறுகிறாய்?" என்று அக்பர் கேட்டார்.
"மன்னரே, உங்கள் ஆட்களைவிட்டு எண்ணச் சொல்லுங்கள்! காக்கைகள் அதிகமாக இருந்தால் அவை தங்கள் உறவினர்களைச் சந்திக்க இங்கு வந்திருக்கக்கூடும். குறைவான எண்ணிக்கையில் இருந்தால் தங்கள் உறவினர்களைச் சந்திக்க வேறு இடங்களுக்குச் சென்றிருக்கும்" என்று பீர்பால் கூறினார்.
பீர்பாலின் அறிவார்ந்த பதிலைக் கேட்டு மகிழ்ந்தார் அக்பர்.

### பிழை நீக்கி எழுதுக.

1. **மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.**
   மதீனா சிறந்த இசை வல்லுநராக வேண்டும்.
2. **நல்ல தமிழுக்கு எழுதுவோம்.**
   நல்ல தமிழில் எழுதுவோம்.
3. **பவளவிழிதான் பரிசு உரியவள்.**
   பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.
4. **துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.**
   துன்பத்தைப் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. **குழலியும் பாடத் தெரியும்.**
   குழலிக்கும் பாடத் தெரியும்.

### இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.
பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. **அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.**
   அலுவலர் வந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. **சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.**
   சுடர்க்கொடியும், மாலனும் பாடினார்கள்.
3. **பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.**
   பழனிமலையை விட இமயமலை மிகவும் பெரியது.
4. **கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.**
   கவலையற்ற எதிர்காலத்திற்குக் கல்வியே நிகழ்காலம்.




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.** அரையாண்டுத் தேர்வு 2019

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

**நாள்** – செப்டம்பர் 19 முதல் 28 வரை

**இடம்** – சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**நேரம்** – காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

**செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைத்தல் :**

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் செப்டம்பர் 19 முதல் 28 வரை புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது. முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார். இந்தப் புத்தகத் திருவிழா காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம் பெறும். புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்! இந்நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரும் வாரீர்! அறிவுத் திறம் பெறுவீர்!



**நிகழ்வினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.**

அண்ணாவின் வாழ்க்கையில்....

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளிமாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே சோதனை செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, "தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், "இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள்" என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, "நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர் பதவிக்கு வரவேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

1. **மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?**

வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே சோதனை செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பது அண்ணா என்று புரிந்து கொண்டார்.

2. **அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?**

மகிழுந்தில் வந்திருப்பது முதலமைச்சர் அண்ணா என்று புரிந்து கொண்ட வருவாய் அலுவலர் உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, "தெரியாமல் நடந்து விட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**3. அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?**

"நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும்" என்று அண்ணா வருவாய் அலுவலரைப் பாராட்டினார்.

**4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.**

(i) பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார்.

(ii) உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே.

**5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

நேர்மை.



## மொழியோடு விளையாடு

**சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.**

(எ.கா) மாணவர்கள் – வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.

1. **புத்தகம்** – ஆசிரியர் கரத்தில் **புத்தகம்** இருந்தது.
2. **அறை** – **அறை**யில் மாணவர்கள் மடிக்கணினி மூலம் வார்த்தை விளையாட்டினை உருவாக்கி அகமகிழ்ந்தனர்.
3. **மடிக்கணினி** – **மடிக்கணினி** மூலம் கல்லூரி மாணவர்கள் அறிவியல் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டிருந்தனர்.
4. **ஆசிரியர்** – **ஆசிரியர்** பாட வேளையில் மாணவர்களுக்குப் பாரதியார் பாடலைப் பாடி தமிழுணர்வினை ஊட்டினார்.
5. **எழுதுகோல்** – மாணவர்கள் அனைவருக்கும் ஆசிரியர் **எழுதுகோல்** கொடுத்தார்.
6. **கல்லூரி** – **கல்லூரி** வாசல் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை உயர்நிலை அடையச் செய்கிறது.
7. **பாடவேளை** – தமிழாசிரியர் தமிழ் **பாடவேளை**யில் மாணவர்களுக்குப் புணர்ச்சி இலக்கணம் கற்பித்தார்.
8. **அழிப்பான்** – பள்ளியில் மாணவர்கள் கரும்பலகையில் உள்ளதை **அழிப்பான்** கொண்டு அழித்தனர்.
9. **உயர்நிலை** – மாணவர்கள் கற்றால் வாழ்க்கையில் **உயர்நிலை** அடையலாம்.
10. **கரும்பலகை** – ஆசிரியர் **கரும்பலகை**யைப் பயன்படுத்தினார்.
11. **வழிபாட்டுக் கூட்டம்** – தமிழகம் முழுவதும் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் **வழிபாட்டுக் கூட்டம்** நடத்த பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.
12. **சீருடை** – அனைத்து மாணவர்களும் பள்ளிச் **சீருடை**யில்தான் வரவேண்டும் என்று தலைமையாசிரியர் கட்டளையிட்டார்.

**அகராதியில் காண்க,**

1. **அரங்கு** – கருப்பம், உள்வீடு, மன்றம்
2. **ஒட்பம்** – அறிவு, தளர்ச்சி அழகி
3. **கான்** – மணம், காடு, வாய்க்கால்
4. **நசை** – அன்பு, விருப்பம், ஆசை, குற்றம்
5. **பொருநர்** – படைவீரன், குறிஞ்சிநிலத் தலைவன், பகைவர், அரசன்





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores





**படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**


(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர் தண்ணீர்)

1. நா. காமராசனின் கவிதை நூல்......



**விடை:** கருப்பு மலர்கள்

2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்...........



**விடை:** தண்ணீர் தண்ணீர்

3. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்...............



**விடை:** கிழவனும் கடலும்

4. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற சிற்பியின் கவிதை நூல்...............



**விடை:** ஒரு கிராமத்து நதி

5. எஸ். ராமகிருஷ்ணனின் சிறார் நாவல்......................



**விடை:** சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



வாழ்க்கை எனும் பாதையில்
வெற்றி எனும் படிகளில் ஏறி
இலக்கு எனும் உச்சியில்
புகழ் எனும் விளக்கு ஏற்று!
அறியாமை எனும் இருள் விலகும்
கல்வி எனும் தீபம் சுடர் விடும்!
எண்ணும் எழுத்தும் இரு கண்கள்
படிப்பும் ஒழுக்கமும் இரு கண்கள்.

1. படிப்படியாக முன்னேற படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.
2. 'கற்க கசடற' என்ற வள்ளுவர் வாக்கினைச் சிரம் மேற்கொண்டு கற்க வேண்டும்.
3. உயர உயரச் செல்லும் பறவைகளைப் போலப் படிப்பால் உயர வேண்டும்.
4. எண்ணும் எழுத்தும் இரு கண்கள் , படிப்பும் ஒழுக்கமும் இரு கண்கள் என்பதை உணர வேண்டும்.
5. நம்மை மேலே ஏற்ற யாரும் வரமாட்டார்கள்; கல்வி ஒன்றே நம்மை ஏற்றும் என்பதை உணர்வாய்ப் பெண்ணே!



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 ×1 = 4)

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்.

க) அ-3, ஆ- 4, இ -1 , ஈ- 2 உ) அ-2, ஆ- 3, இ -1, ஈ- 4
ங) அ-3, ஆ- 1, இ - 4, ஈ- 2 ச) அ-4, ஆ- 1, இ -2, ஈ- 3

2. கோத்தாரிக் கல்விக்குழு ......... ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

அ) 1960 ஆ) 1964 இ) 1950 ஈ) 1955

3. தமிழகத்தில் முதல் பெண் மருத்துவர் .......

அ) ஔவையார் ஆ) முத்துலெட்சுமி
இ) மலாலா ஈ) விஜயலட்சுமி

4. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை
ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
6. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
7. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
8. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

9. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
10. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
11. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. "பூவாது காய்க்கும்" எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை அடிபிறழாமல் எழுது.

**V. விடையளிக்க. (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
14. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

☆☆☆

ஏதிலிக் குருவிகள் (side tab)


orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



இயல் 7

வாழிய நிலனே

# சந்தை

விரிவானம்

## கரு

- ✳ கிராமங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்கவும் அதற்கு மாறாக வேறு பொருள்களை வாங்கவும் முச்சந்தி, நாற்சந்தி என மக்கள் கூடும் இடங்களில் கடை விரித்தனர். இது சந்தை உருவாக அடிப்படையாக அமைந்தது.
- ✳ கிராமச் சந்தைகளில் கலப்படம் இல்லாமல் நேர்மையான முறையில் பொருள்கள் விற்கப்பட்டன.
- ✳ பொருள்கள் வாங்குபவருக்கு மனநிறைவு ஏற்படும் அளவில் சந்தை விளங்கியது. விற்பவர், வாங்குபவர் உறவு வளர்த்த சந்தை வணிகம் குறித்து இப்பகுதி விளக்குகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்துக.**

| ஊர் | | சந்தை | |
|---|---|---|---|
| அ) | மணப்பாறை | 1. | ஐவுளி |
| ஆ) | ஒட்டன்சத்திரம் | 2. | பூ |
| இ) | தோவாளை | 3. | மாடு |
| ஈ) | ஈரோடு | 4. | காய்கறி |

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 1, 2, 3

**2. பகலில் செயல்படும் கடைவீதிகள் .............. .**
அ) சந்தை ஆ) நாளங்காடி இ) பல்லங்காடி ஈ) அல்லங்காடி

**3. போச்சம்பள்ளிச் சந்தையின் வயது ............ ஆண்டுகள்.**
அ) 100 ஆ) 125 இ) 150 ஈ) 99

**4. போச்சம்பள்ளிச் சந்தை அமைந்துள்ள மாவட்டம் ............... .**
அ) தர்மபுரி ஆ) சேலம் இ) கிருஷ்ணகிரி ஈ) திண்டுக்கல்

**5. மாட்டுத்தாவணி பேருந்துநிலையம் எங்குள்ளது?**
அ) திண்டுக்கல் ஆ) மதுரை இ) விருதுநகர் ஈ) புதுக்கோட்டை

**6. மாட்டின் வயது, வலிமை கீழ்க்கண்ட எவற்றால் கண்டுபிடிக்கப்படுகிறது?**
அ) கொம்பு ஆ) பல் இ) திமில், வால் ஈ) இவையனைத்தும்

**7. மால் என்பது ............ .**
அ) கிராமச்சந்தை ஆ) பல்லங்காடியகம்
இ) அல்லங்காடியகம் ஈ) நாளங்காடியகம்

**8. வணிகருக்கும் மக்களுக்குமான உறவைக் குறைத்து வருவது ..................**
அ) சந்தை வணிகம் ஆ) சிறு வணிகம்
இ) நேரிடை வணிகம் ஈ) பல்பொருள் அங்காடி

**9. பல்லங்காடியகத்தினுள் சேராதது..........**
அ) திரைப்பட அரங்கு ஆ) உணவகம்
இ) கேளிக்கை அரங்குகள் ஈ) சந்தை



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**10. சரியான தொடரைத் தேர்க.**

1. பெரியவர் தணிகாசலம் மரபு வழி வேளாண்மை செய்தவர்,
2. கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச் சந்தையோட அடிப்படை
3. கரகாட்டமும் பொம்மலாட்டமும் கிராமச்சந்தையில் உண்டு,
4. பகலில் செயல்படும் கடை வீதிகள் அல்லங்காடி என்று பெயர்.

அ) 1,4 சரி ஆ) 1,2 சரி இ) 3,4 சரி ஈ) 1,3 சரி

**11. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது..........**

அ) கால்நடைச் சந்தை ஆ) வாரச் சந்தை
இ) நாட்டுச் சந்தை ஈ) கிராமச்சந்தை

**12. மக்கள் நாகரிகம் முழுமையும் வளமையும் அடைந்த நிலங்கள்..........**

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) இம்மூன்றும்

**13. கிராமச் சந்தையில் இடம் பெறுபவை...............**

1. உற்பத்தியாளன் தான் விற்பனையாளன்
2. இடைத்தரகர்களுக்கு வேலை இல்லை
3. குளிரூட்டப்பட்ட அறை இல்லை
4. விற்கிறவனும் வாங்குகிறவனும் உடன்பட்டால் அது தான் பொருளின் விலை

அ) 1, 2, 3 சரி ஆ) 2, 3, 4 சரி இ) 1, 3,4 சரி ஈ) அனைத்தும் சரி

**14. கடையில் பொருள்கள் வாங்கும் போது கவனிக்கப்பட வேண்டியது..........**

அ) விலை ஆ) எடை இ) கெடுநாள் ஈ) உற்பத்தி நாள்

**15. வணிக வளாகங்களை நிர்வகிப்பதில் இருக்கும் முக்கிய செயல்பாடுகள்**

அ) மேலாண்மை ஆ) கட்டமைப்பு வசதி
இ) தொடர் பராமரிப்பு ஈ) இவையனைத்தும்

**16. தொடர்களை வரிசைப்படுத்துக.**

1. சந்தை வெறும் உதட்டு வியாபாரம் மட்டும் பேசும் களம் இல்லை.
2. குழந்தையின் ஆசையில் வணிகம் குறுக்கிடாது.
3. விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக்கம்பி இழையோடும்.
4. சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு, நேர்மை உண்டு.

அ) 1 ,3, 2, 4 ஆ) 1, 2, 3, 4 இ) 2 ,4, 1, 4 ஈ) 2, 1, 3, 4

**17. பொதியை ஏத்தி வண்டியிலே**
**பொள்ளாச்சி சந்தையிலே**
**விருது நகர் வியாபாரிக்கு செல்லக்கண்ணு**
**நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு செல்லக்கண்ணு இப்பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர்..........**

அ) கண்ணதாசன் ஆ) புலமைப்பித்தன் இ) மருதகாசி ஈ) வாலி

**18. கூற்று : பெரு வணிக வளாகக்கடைகளை திட்டமிட்டால் தான் நிர்வகிக்க முடியும்.**
**காரணம் : மேலாண்மை, கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்பு போன்ற ஏகப்பட்ட தொடர் செயல்பாடுகள் உள்ளன.**

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்றும் காரணமும் சரி ஈ) கூற்றும் காரணம் தவறு

**19. போச்சம்பள்ளிச் சந்தையில் இருக்கும் கடைகளின் எண்ணிக்கை**

அ) 8,000 ஆ) 7,500 இ) 6,500 ஈ) 8,500

**20. போச்சம்பள்ளிச் சந்தையின் பரப்பு ............ ஏக்கர் ஆகும்.**

அ) 17 ஆ) 18 இ) 20 ஈ) 19





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



21. **தணிகாசலம் மகள் வாழும் ஊர்........**

அ) மதுரை ஆ) நாகப்பட்டினம் இ) புதுச்சேரி ஈ) கடலூர்

22. **தணிகாசலம் ஊராட்சித் தலைவராக தொண்டாற்றிய ஊர் .............**

அ) பூஞ்சோலை கிராமம் ஆ) காராமணி குப்பம்
இ) அய்யலூர் ஈ) விருது நகர்

23. **தணிகாசலத்தின் பெயரன், பெயர்த்தியின் பெயர்கள்..........**

அ) முருகன், விமலா ஆ) கபிலன், காவ்யா
இ) மூர்த்தி, கீர்த்தனா ஈ) மூர்த்தி, கிரிஜா

விடைகள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இ) | 3, 4, 2, 1 | 2. | ஆ) | நாளங்காடி |
| 3. | ஆ) | 125 | 4. | இ) | கிருஷ்ணகிரி |
| 5. | ஆ) | மதுரை | 6. | ஈ) | இவையனைத்தும் |
| 7. | ஆ) | பல்லங்காடியகம் | 8. | ஈ) | பல்பொருள் அங்காடி |
| 9. | ஈ) | சந்தை | 10. | ஆ) | 1,2 சரி |
| 11. | ஈ) | கிராமச்சந்தை | 12. | ஈ) | இம்மூன்றும் |
| 13. | ஈ) | அனைத்தும் சரி | 14. | இ) | கெடுநாள் |
| 15. | ஈ) | இவையனைத்தும் | 16. | அ) | 1, 3, 2, 4 |
| 17. | இ) | மருதகாசி | 18. | இ) | கூற்றும் காரணமும் சரி |
| 19. | அ) | 8,000 | 20. | ஆ) | 18 |
| 21. | இ) | புதுச்சேரி | 22. | அ) | பூஞ்சோலை கிராமம் |
| 23. | இ) | மூர்த்தி, கீர்த்தனா | | | |

## மதிப்பீடு - புத்தக வினா

**குறுவினா** கேள்வி எண்: 4

4. **உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.**

**எங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்கள் :** நெல், வேர்க்கடலை, கம்பு, சோளம், கேழ்வரகு, நவதானியங்கள், கீரை வகைகள், காய்கறிகள், பலவிதமான பூக்கள்.

**சந்தையில் காணும் பொருள்கள் :** கடுகு, சீரகம், உணவுத் தானியங்கள், காய்கறிகள், கோழி, ஆடு, மாடு, குதிரை, சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள், இரும்புப் பொருள்கள்.

### கூடுதல் வினாக்கள்

1. **அல்லங்காடி என்றால் என்ன?**

'அல்' என்றால் இரவு என்று பொருள். 'நாள்' என்றால் பகல் என்று பொருள். இரவில் செயல்படும் கடை வீதிகளை 'அல்லங்காடி என்று கூறுவர்.

2. **பண்டமாற்று முறை என்றால் என்ன?**

தமிழ்நாட்டின் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் தேவை, பயன்பாடு, உற்பத்தி ஆகியவை பெருகின. ஒன்றைக் கொடுத்து இன்னொன்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விற்று வாங்குவதும் வாங்கி விற்பதுமான பண்டமாற்று முறை உண்டாயிற்று.

3. **சந்தை என்கிற பொது வணிகம் – குறிப்பு வரைக.**

கிராமத்து மக்கள் தங்களின் நிலத்தில் விளையும், காய்கறிகள், கீரைவகைகள், நவதானியங்கள் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி முச்சந்தி, நாற்சந்தின்னு மக்கள் கூடும் இடங்களில் கடை விரித்தனர். இதுதான் சந்தை என்கிற பொது வணிக இடமாகப் பின்னால் மாறியது.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**4. பல்லங்காடியகம் என்றால் என்ன?**

ஒரே இடத்தில் எல்லாக் கடைகளும் இருக்கும். குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் வாங்கலாம். இதனை பல்லங்காடியகம் என்றும் கூறலாம்.

**5. மால் என்றால் என்ன?**

ஒரே கட்டடத்தில் கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரங்குகள் போன்றன இருக்கும் இடத்தினை மால் என்பர்.

**6. நவீன சந்தை குறிப்பு வரைக.**

நவீன சந்தையில் உற்பத்தி செய்கின்றவன் ஒருவன். மொத்தமாக வாங்குகின்றவன் வேறொருவன். சில்லறையாக விற்கின்றவன் இன்னொருவன்.

## கூடுதல் வினாக்கள்

### சிறுவினா

**1. கிராமச் சந்தை - குறிப்பு வரைக.**

(i) கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச் சந்தையின் அடிப்படையாகும். ஒரு குறிப்பிட்ட ஊரை மையப்படுத்தி நூற்றுக்கணக்கான கிராமங்களில் வாழும் மக்கள் இப்படி நேர்மையாக தங்களின் பொருள்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

(ii) உள்ளூர்த் தேவைக்கு ஏற்ற மாதிரி, அங்கு விளைகின்ற உணவுப் பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கின்ற சிறு வணிகச் செயல்பாடுதான் கிராமச் சந்தை.

(iii) மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதுதான் அதன் நோக்கமாகும். கடுகு, மிளகு, சீரகத்திலிருந்து உணவுத் தானியங்கள், காய்கறிகள், கோழி, ஆடு, மாடு, குதிரை ஆகிய கால்நடைகள், சீப்பு, சோப்பு, கண்ணாடி, வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள், பாத்திரங்கள், துணிமணிகள் என்று ஒரு குடும்பத்திற்கு, தொழிலுக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கலாம். அது மட்டுமல்ல பல பேருக்கு வேலைவாய்ப்பையும் கொடுத்தது கிராமச் சந்தை.

**2. நாட்டுச் சந்தை - குறிப்பு வரைக.**

(i) நாட்டுச் சந்தைக்குக் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டுப் போனால் கடையில் இருக்கும் தக்காளி, கேரட் எனக் குழந்தை எதை எடுத்தாலும் அதற்குக் காசு இல்லை.

(ii) குழந்தையின் ஆசையில் வணிகம் குறுக்கிடாது.

(iii) நாட்டுச் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்து போவதில்லை.

(iv) சந்தையில் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு நேர்மையும் உண்டு.

**3. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சந்தைக்குப் பெயர் போனதைப் பட்டியலிடுக.**

(i) மணப்பாறை - மாட்டுச் சந்தை.
(ii) அய்யலூர் - ஆட்டுச் சந்தை.
(iii) ஒட்டன்சத்திரம் - காய்கறிச் சந்தை.
(iv) நாகர்கோவில் தோவாளை - பூச்சந்தை.
(v) ஈரோடு - ஜவுளிச்சந்தை.
(vi) நாகப்பட்டினம் - மீன்சந்தை.

இப்படித் தமிழ்நாடு முழுவதும் பல சந்தைகள் இருக்கின்றன.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**4. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.** ※

| சந்தை | பல்பொருள் அங்காடி |
|---|---|
| கிராமத்து மக்கள் தங்கள் நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பினர். மக்கள் கூடும் இடம் சந்தையாகும். | ஒரே இடத்தில் எல்லாக் கடைகளும் இருக்கும். ஒரே கட்டடத்தில் கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரங்குகள் என எல்லாம் இருக்கும் இடமாகும். |
| கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச் சந்தையோட அடிப்படை, ஒரு குறிப்பிட்ட ஊரை மையப்படுத்தி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் நேர்மையாக தங்களின் பொருள்களைப் பகிர்ந்து கொண்டனர். | தேவைக்கும் அளவுக்கும் ஏற்பப் பொருள்களை தேர்ந்தெடுக்கலாம். இந்த மாதிரி அங்காடிகள் பலருக்கு நிரந்தர வேலை கொடுக்க முடியும். இதுபோன்ற கடைகளைத் திட்டமிட்டாத்தான் நிருவகிக்க முடியும். அதற்கு ஏற்ப மேலாண்மை கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்புன்னு இதன் பின்னால் ஏகப்பட்ட தொடர் செயல்பாடுகள் இருக்கின்றன. |
| குறைந்த செலவில் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றிற்குத் தேவையான பொருள்கள் சீரகம், கடுகு, உணவுத் தானியங்கள், காய்கறிகள், கோழி, ஆடு, மாடு, குதிரை, சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள், இரும்புப் பொருள்கள் பாத்திரங்கள், துணிமணிகள் உட்பட இங்கு கிடைக்கின்றன. | இதற்கு பெரிய முதலீடு தேவைப்படுகிறது. ஒரே இடத்தில் எல்லாக் கடைகளும் இருக்கும். குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் இங்கு வாங்கலாம். |
| நாட்டுச் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்து விடுவதில்லை. சந்தையின் சாதாரண விசாரிப்புகளும் உண்டு அதில் நேசமும் பாசமும் நேர்மையும் உண்டு. | இங்கு வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது கிடையாது. ஏனெனில் பலதரப்பட்ட மக்கள் கூடும் இடம். மக்கள் நெருக்கம் அதிகம். நலம் விசாரிக்க நேரம் இல்லை. விறுவிறுப்பான வியாபாரம் நடக்கும் பகுதி இது. இங்கு நேசம் பாசம் இதற்கு இடமில்லை. |



## மதிப்பீடு - புத்தக வினா

**நெடுவினா** கேள்வி எண்: 3

**3. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.**

### செய்திதாள் – தலையங்கம்/கட்டுரை

### எங்கள் ஊர்ச் சந்தை

திருவண்ணாமலை என்று சொன்ன உடனே நம் நினைவிற்கு வருவது கிரிவலமே. மாதந்தோறும் பௌர்ணமி நாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கிரிவலம் வரும் சிறப்பு இம்மாவட்டத்திற்கு உண்டு. அந்த மாவட்டத்தில் அடங்கிய வெம்பாக்கம் வட்டத்தில் இருக்கும் அழகிய கிராமம்தான் மாத்தூர். இங்கு காலங்காலமாக வாரச் சந்தைக்கூடும். சந்தைக்கூடும் இடம் சந்தை மேடு எனப் பெயரிட்டு அழைப்பர் அவ்வூர் மக்கள். கிராமத்து மக்கள் தங்களுடைய நிலத்தில் விளையும் காய்கறிகள், கீரை வகைகள், நவதானியங்கள் போன்ற பொருள்களை வாங்கவும் விற்கவும் கூடும் இடத்தைச் சந்தை என அழைப்பர். அந்தச் சந்தைதான் இப்பொழுது பொது வணிக வளாகமாக மாறியது.

என் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவத்தை உணர்த்த ஆசைப்படுகிறேன். எங்கள் ஊரில் வெள்ளிக்கிழமை வாரச் சந்தை. அந்தச் சந்தையைச் சுற்றிப் பார்த்தோம். எதிர்பாராமல் கிடைக்கும் ஒரு மந்திரக் கோலின் உதவியுடன் மந்திரவாதி வித்தைக் காட்டிக் கொண்டிருந்தான். வேடிக்கைப் பார்க்க கூட்டம் கூடியது. அதிலும் நானும் என் உறவினரின் மகனும் இருந்தோம்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



# மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.**

Conversation between two friends meeting by chance at a mall.

**Aruna** : Hi Vanmathi! It's great to see you after a long time.

**Vanmathi** : It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?

**Aruna** : Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?

**Vanmathi** : I came with my father. He has gone to buy tickets for a 3D movie.

**Aruna** : Which movie?

**Vanmathi** : Welcome to the jungle.

**Aruna** : Great! I am going to ask my parents to take me to that movie.

**விடை:**

ஒரு வளாகத்தில் எதிர்பாராமல் சந்தித்த இரு நண்பர்களின் உரையாடல் :

**அருணா** : வணக்கம். வான்மதி நீண்ட நாட்களுக்குப் பிறகு உன்னைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி.

**வான்மதி** : உன்னைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி. உன்னைப் பார்த்து எவ்வளவு காலமாகிவிட்டது? ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. நான் நன்றாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்?

**அருணா** : நான் நலம். நான் என் பெற்றோருடன் வந்திருக்கிறேன். அவர்கள் மளிகைக் கடையில் உள்ளனர். நீ என்ன செய்கிறாய்?

**வான்மதி** : நான், என் அப்பாவுடன் வந்தேன். 3D(முப்பரிமாணம்) படம் பார்ப்பதற்கு நுழைவுச் சீட்டு வாங்குவதற்காகப் போயிருக்கிறார்.

**அருணா** : என்ன படம்?

**வான்மதி** : 'வெல்கம் டு தி ஜங்கில்' என்ற படம்.

**அருணா** : நல்லது. நானும் என் பெற்றோரிடம் இந்தப் படத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கேட்கப் போகிறேன்.

**பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.**

**1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)**

(எ.கா) நல்ல புத்தகம் படிக்கலாம், நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.

(i) நாளும் **நல்ல** புத்தகத்தை **ஆழ்ந்து** படிக்கலாம்.

(ii) நாளும் நல்ல புத்தகத்தைத் **தேர்ந்து** படிக்கலாம்.

(iii) நாளும் நல்ல புத்தகத்தை ஆழ்ந்து **மகிழ்ந்து** படிக்கலாம்.

(iv) நாளும் நல்ல புத்தகத்தை ஆழ்ந்து **உணர்ந்து** படிக்கலாம்.

**2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)**

(i) **ஓடியாடி** விளையாடுவது நன்று.

(ii) **மாலையில்** ஓடியாடி விளையாடுவது நன்று.

(iii) அனைவருடன் **சேர்ந்து** மாலையில் ஓடியாடி விளையாடுவது நன்று.

(iv) **திடலில் அனைவரு**டன் சேர்ந்து மாலையில் **ஓடியாடி** விளையாடுவது நன்று.




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

இயல் 7

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores




**வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.**




| | | |
|---|---|---|
| காலை | கான் | தகவல் |
| கால் | காவல் | புத்தம் |
| தில் | அன்பு | புத்தகம் |
| தில்லை | தறி | அறி |
| வத்தி | | |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**புவியைப் போற்று**

புதிய பாரதம் மலரட்டும் – இங்குப்
புன்னகை பூக்கள் மணக்கட்டும்.
மரங்கள் சேர்ந்தால் காடாகும்.
மலர்கள் சேர்ந்தால் மாலையாகும்.
மேகங்கள் சேர்ந்தால் மழையாகும்
மழைத்துளிகள் சேர்ந்தால் நீர்வளமாகும்.
பறவைகளின் ஒற்றுமையைப் பார்.
எறும்புகளின் அணிவரிசையைப் பார்.
பொய்மை புரட்டு ஓடட்டும் – இங்கு
வாய்மை வேள்வி சிறக்கட்டும்!
எதிலும் புதுமை தோன்றட்டும் – இங்கு
எல்லோரும் வாழ வேண்டட்டும்!

1. தமிழ்நாட்டின் மாநில மரமான பனைமரங்கள் நிற்க வரையாடும் மரகதப்புறாவும் அழகு சேர்க்கின்றன.
2. தமிழர் திருநாளாம் பொங்கலின் அடையாளமாய் பொங்கல் பானையும் இருமருங்கில் கரும்புகளும் நிற்கின்றன.
3. சூரியனைக் கண்ட தாமரை வெட்கத்தில் சிவந்துவிட்டது. தாமரையைக் கண்ட பெண் உவகையில் நடனமாடுகிறாள்.
4. தேசப்பற்றை உணர்த்த ஒருவன் தேசியக் கொடியை ஏந்தியபடி செல்கிறான்.
5. இறைவழிபாட்டை உணர்த்தும் கோவில் கோபுரம். இவையெல்லாம் நம் பண்பாட்டின் உறைவிடங்கள் ஆகும்.

**செயல் திட்டம்.**

**ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களின் பட்டியலை உருவாக்குக.**

தங்கள் வீட்டில் ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் பட்டியலை மாணவர்கள் தாங்களே செய்ய வேண்டும்.

**அகராதியில் காண்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஈகை – கொடை | 2. | குறும்பு – சேட்டை, வலிமை |
| 3. | கோன் – அரசன், தலைவன் | 4. | புகல் – கூறு, தஞ்சம், புகழ், புகுதல், தஞ்சம் |
| 5. | மொய்ம்பு – வலிமை, தோள் | | |

## நிற்க அதற்குத் தக

**சமூகத்திற்கு எனது பணிகள்**

அ) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்.
ஆ) தண்ணீர் வீணாவதை எங்குக் கண்டாலும் தடுப்பேன்.
இ) மழைநீர்ச் சேகரிப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துவேன்.
ஈ) சுற்றுச்சூழலைப் பாதுகாப்பேன்.
உ) கண்ணெதிரில் நடக்கும் தவறுகளைத் தட்டிக் கேட்பேன்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



ஊ) என் பகுதியில் இருக்கும் மாணவர்கள் கற்பதற்கு உதவி செய்வேன்.
எ) மழை பெறுவதற்கு மரங்களை வளர்ப்பேன்.
ஏ) என்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்.

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| 1. இந்திய தேசிய இராணுவம் – Indian National Army | 4. கரும்புச் சாறு – Sugarcane Juice |
| 2. செவ்வியல் இலக்கியம் – Classical Literature (அரையாண்டுத் தேர்வு 2019) | 5. காய்கறி வடிசாறு – Vegetable Soup (அரையாண்டுத் தேர்வு 2019) |
| 3. பண்டமாற்றுமுறை – Commodity Exchange | |

**அறிவை விரிவு செய்**

1. ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு. மேத்தா
2. தமிழ்ப் பழமொழிகள் – கி.வா. ஜகந்நாதன்
3. இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) – ச. தமிழ்ச்செல்வன்

☆☆☆

## சாலை பாதுகாப்பு

**கூடுதல் வினாக்கள்**

**1. போக்குவரத்து விதிகளை பற்றிய விழிப்புணர்வு முழக்கங்களை எழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019

**போக்குவரத்து விதிகளை பற்றிய விழிப்புணர்வு:**

(i) அலைபேசியை அணைத்துவிட்டுச் சாலையைக் கடப்பதே நல்லது.
(ii) அலைபேசியில் பாட்டு கேட்டபடி, பேசியபடி ஊர்தியை ஓட்டாதீர்கள்.
(iii) விளையாட்டுத் திடல்களில் மட்டுமே விளையாடுங்கள், சாலைகளில் அல்ல.
(iv) சாலைகளின் இருபுறங்களிலும் உள்ள நடைமேடைகளைப் பயன்படுத்துங்கள்.
(v) விதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் சாலையைக் கடக்கவும்.
சாலை விதிகளை மதிப்பது உயிர்ப் பாதுகாப்பின் முதல் படி. தறிகெட்ட வேகம் நூற்று எட்டில் முடியும்.

**2. இந்தியாவில் பயணிக்கும் சாலை வகைகளை பற்றி விளக்குக.**

(i) **தேசிய நெடுஞ்சாலைகள்** (National Highways) : நாட்டின் முக்கிய நகரங்கள், துறைமுகங்கள், சுற்றுலாத் தலங்கள் போன்றவற்றை இணைப்பவை.

(ii) **மாநில நெடுஞ்சாலைகள்** (State Main Roads) : இவை தேசிய நெடுஞ்சாலைகளை மாநிலங்களோடு இணைக்கின்றன. மாநில நெடுஞ்சாலைகள் மாவட்டங்களின் தலைநகரங்கள், சுற்றுலாத் தலங்கள், மாவட்டங்களில் உள்ள சிறு நகரங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.

(iii) **சிற்றூர்ச் சாலைகள்** (Village Roads) : இந்தியாவின் நாடித்துடிப்பாக விளங்குபவை சிற்றூர்களே (கிராமங்களே). அந்தச் சிற்றூர்களையும் மற்ற ஊர்களையும் இணைப்பவை சிற்றூர்ச் சாலைகள். மாவட்டங்களையும் மாநிலங்களையும் தாண்டித் தேசிய நீரோட்டத்தில் கலக்கிறது.

☆☆☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 45 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. இந்திய தேசிய இராணுவம் ............ இன் தலைமையில் ................ உருவாக்கினர்.
அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
அ) வருக்கை – இருக்கை ஆ) புள் – தாவரம்
இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

3. 'நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு' – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
அ) பாண்டிய நாடு, சேரநாடு ஆ) சோழநாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழநாடு, பாண்டிய நாடு

4. இளங்கமுகு, செய்கோலம் – இலக்கணக் குறிப்புத் தருக.
அ) உருவகத் தொடர், வினைத் தொகை
ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
இ) வினைத் தொகை, பண்புத் தொகை
ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
6. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
7. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.
8. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

9. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கத்தேவர் பாடியுள்ளார்?
10. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
11. இந்தியாவில் பயணிக்கும் சாலை வகைகளை பற்றி விளக்குக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'சொல்வரும் சூல் பசும்' எனத் தொடங்கும் சீவக சிந்தாமணிப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளிக்க. (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.
14. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

☆☆☆





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



இயல் 8

என்தலைக் கடனே

# யசோதர காவியம்

கவிதைப்பேழை

## கரு

* வாழ்க்கை நெறிகளை பற்றி அறிவுறுத்தும் இலக்கியங்களுள் ஒன்று யசோதர காவியம்.
* வளமான வாழ்க்கை வாழ அறத்தின் வழியைப் பின்பற்ற வேண்டும்.
* நம்மில் இருக்கும் சினத்தைப் போக்கி நற்செயல்களை விரும்பிச் செய்ய வேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

## நூற் குறிப்பு

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம். இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது; பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கருதுவர்.

## பாடல்

**ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக**
**போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக**
**நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக**
**காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.** 1405

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. அறம் | – நற்செயல் | 3. ஞானம் | – அறிவு |
| 2. வெகுளி | – சினம் | 4. விரதம் | – மேற்கொண்ட நன்னெறி |

## பொருளுரை

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்; நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்; ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்; இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

## இலக்கணக்குறிப்பு

1. ஆக்குக, போக்குக, நோக்குக – வியங்கோள் வினைமுற்றுகள்

## பகுபத உறுப்பிலக்கணம்

**போக்குக** – போக்கு + க
போக்கு – பகுதி
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

## மதிப்பீடு - புத்தக வினா

### பலவுள் தெரிக

கேள்வி எண்: 5

5. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?
அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

விடை: ஈ) அறிவு



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

1. **யசோதரகாவியம் ............ சருக்கங்களைக் கொண்டது.**
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

2. **ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று ............ .**
அ) யசோதர காவியம் ஆ) இராவண காவியம்
இ) ஆசாரக் கோவை ஈ) நான்மணிக்கடிகை

3. **காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே – என்ற வரியில் விரதம் என்பதன் பொருள் ............ .**
அ) நற்செயல் ஆ) நன்னெறி இ) நன்னடத்தை ஈ) அறிவு

4. **அவந்தி நாட்டு மன்னனின் பெயர்...............**
அ) நன்னன் ஆ) நளன் இ) யசோதரன் ஈ) யாருமில்லை

விடைகள் : 1. அ) ஐந்து 2. அ) யசோதர காவியம்
3. ஆ) நன்னெறி 4. இ) யசோதரன்

## மதிப்பீடு - புத்தக வினாக்கள்

### குறுவினா — கேள்வி எண்: 4

4. **யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**
யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் அவந்தி நாட்டைச் சார்ந்த 'யசோதரன்' என்ற மன்னராவான்.

### சிறுவினா — கேள்வி எண்: 2, 3, 4

2. **நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?**
**நாம் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் :**
(i) நாம் செய்கின்ற செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.
(ii) நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
(iii) ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
(iv) இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

3. **பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.**
**பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் :**
(i) இயேசு காவியம் (ii) சீறாப்புராணம்
(iii) இரட்சணிய யாத்திரிகம் (iv) ஆசிய ஜோதி (v) பரமார்த்த குரு கதை.

4. **யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.**
**நற்செயல்களைச் செய்தல் – திருக்குறள் :**
ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.
இயன்ற வழி வகைகளில் அறச் செயல்களை இடைவிடாமல் வாய்த்த இடமெல்லாம் செய்க என வள்ளுவம் கூறுகிறது.
**யசோதரகாவியம் :** நாம் செய்யும் செயல்கள் பயன்தரக்கூடிய நற்செயலாக இருத்தல் வேண்டும்.
**சினத்தை நீக்க வேண்டும் – திருக்குறள் :**
சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புனையைச் சுடும்.
தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என எண்ணுபவர் தனக்கு சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும் இல்லையெனில் அச்சினமே அவனை அழித்துவிடும்.
**யசோதரகாவியம் :** நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

**1. யசோதர காவியம் குறிப்பு வரைக.**

(i) யசோதர காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று.

(ii) இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றது.

(iii) ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.

(iv) சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர்.

(v) 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.

(vi) ஐந்து சருக்கங்களைக் கொண்டது.

(vii) பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கருதப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

**1. தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.**

| | |
|---|---|
| அறம் செய விரும்பு<br>ஆறுவது சினம் | ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக.<br>போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக. |

**அருண்** : வணக்கம், நண்பா, நலமா இருக்கிறாயா?

**கமலன்** : நலமாக இருக்கிறேன்.

**அருண்** : நாம் இன்று சில தொடர்களை ஒப்பிட்டுப் பேசுவோமா!

**கமலன்** : ம்...ம்... பேசலாம் நண்பா!

**அருண்** : அறம் செய விரும்பு – ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக. அறத்தைச் செய்ய எல்லோருக்கும் விருப்பம் இருக்க வேண்டும். விருப்பம் உண்டானால் அதற்கான வழியும் ஏற்படும். ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டாலும் அறம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் தர்மம் நன்மையை உண்டாக்கும் சக்தியுடையது. எந்தப் பணியைச் செய்தாலும் விருப்பத்துடன் செய்ய வேண்டும்.

**கமலன்** : அருமை. ஆறுவது சினம் – போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக. கோபம் வரும் என்ற மனநிலை உருவாகும்போது உடனே உரையாடலைத் தொடராமல், அவ்விடத்தைவிட்டு எழுந்து சென்று விட வேண்டும். கோபம் முதலில் தன்னைக் கொல்லும். பிறகு தன்னோடு இருப்பவரையும் கொன்று விடும். எனவே கோபத்தைப் போக்கினால் மன அமைதியோடு வாழலாம். நான் சொல்வது சரிதானே?

**அருண்** : சரியாக சொன்னாய் நண்பா!

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

**1. இப்பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் ..............**

அ) யசோதர காவியம் ஆ) குடும்ப விளக்கு

இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

**விடை: அ) யசோதர காவியம்**

**2. வெகுளி என்பதன் பொருள் யாது?**

அ) மகிழ்ச்சி ஆ) அறியாமை

இ) துன்பம் ஈ) சினம்

**விடை: ஈ) சினம்**





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



இயல் 9

அன்பென்னும் அறனே

# அக்கறை

– கல்யாண்ஜி

கவிதைப்பேழை

## கரு

* உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி தம் வசன கவிதைகள் மூலமாக தொடங்கினார். அந்த வகையில் நூறு ஆண்டுகளை எட்டும் புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்துவதாக உள்ளன.
* அடுத்தவர் மீதான அக்கறை நம்மிடம் இல்லாதபோது அங்கு மனிதம் மலராது. வாழ்வில் மனிதம் நசுங்கி விடாமல் இருக்க வேண்டும் என்பதை கல்யாண்ஜியின் இக்கவிதை வலியுறுத்துகிறது.

## ஆசிரியர் குறிப்பு

பெயர் : கல்யாண்ஜி
இயற்பெயர் : சி. கல்யாண சுந்தரம்
புனைப் பெயர் : வண்ணதாசன்
ஊர் : திருநெல்வேலி
தந்தை : தி.க. சிவசங்கரன் (சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்)
பிறப்பு : 22.08.1946 (அகவை 75)
விருது : 2016 – சாகித்திய அகாதெமி – ஒரு சிறு இசை.
நூல்கள் : (கவிதை) புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு

கூடுதல் செய்தி :

புதினம் : சின்னு முதல் சின்னு வரை
கட்டுரை : அகம்புறம்
கடிதம் : வண்ணதாசன் கடிதங்கள்
சிறுகதை தொகுப்பு : சமவெளி, மனுஷா, கனிவு, நடுகை, உயரப் பறத்தல் சில இறகுகள் சில பறவைகள், ஒரு சிறு இசை.

## பாடல்

**சைக்கிளில் வந்த**
**தக்காளிக் கூடை சரிந்து**
**முக்கால் சிவப்பில் உருண்டது**
**அனைத்துத் திசைகளிலும் பழங்கள்**
**தலைக்கு மேலே**
**வேலை இருப்பதாய்க்**
**கடந்தும் நடந்தும்**
**அனைவரும் போயினர்**
**பழங்களை விடவும்**
**நசுங்கிப் போனது**
**அடுத்த மனிதர்கள்**
**மீதான அக்கறை.**

– கல்யாண்ஜி

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. சைக்கிள் – மிதிவண்டி | 2. அக்கறை – கரிசனை |



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## பொருளுரை

மிதிவண்டியில் வந்த தக்காளி கூடை சரிந்து ஒரே சிவப்பு மயமாய் தரையில் உருண்டு ஓடியது. எல்லாத் திசைகளிலும் பழங்கள் சிதறிக் கிடந்தன. பார்த்தவர் அனைவரும் தங்களுக்கு அதிக வேலை இருப்பதாகக் கூறியபடி கடந்தும் அதன் வழியாக நடந்தும் சென்றனர். நசுங்கிய பழங்களை விட அவர்கள் உள்ளத்தில் நசுங்கிப்போனது பிற மனிதர்கள் மீதான அக்கறை(கரிசனை).

## இலக்கணக்குறிப்பு

1. உருண்டது, போனது – ஒன்றன் பால் வினைமுற்றுகள்
2. சரிந்து – வினையெச்சம்
3. அனைவரும் – முற்றும்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

**சரிந்து** – சரி + த்(ந்) + த் + உ
சரி – பகுதி
த் – சந்தி (ந் ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

## மதிப்பீடு - புத்தக வினா

### பலவுள் தெரிக

கேள்வி எண்: 3

3. **வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்**
அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

**விடை:** அ) ஒரு சிறு இசை

### கூடுதல் வினாக்கள்

1. **கல்யாண்ஜியின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற சிறுகதை ............. .**
அ) அந்நியமற்ற நதி ஆ) மணல் உள்ள ஆறு
இ) ஒரு சிறு இசை ஈ) ஒளியிலே தெரிவது

2. **கல்யாணசுந்தரம் எழுதிய கடிதங்களின் தொகுப்பு ............. .**
அ) சில இறகுகள் சில பறவைகள் ஆ) அகமும் புறமும்
இ) கலைக்க முடியாத கற்பனைகள் ஈ) தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்

3. **உரைநடையில் கவிதை எழுதுவதை வசன கவிதை வழியாக தொடங்கியவர் ............. .**
அ) ந. பிச்சமூர்த்தி ஆ) வண்ணதாசன்
இ) பாரதியார் ஈ) வல்லிக்கண்ணன்

4. **பழங்களை விடவும்
நசுங்கிப்போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை – இதில் நசுங்கிப்போனது எது?**
அ) பழங்கள் ஆ) அக்கறை இ) மனிதம் ஈ) உண்மை





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சு. சமுத்திரத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு .............. .**

அ) குற்றம் பார்க்கில் ஆ) வேரில் பழுத்த பலா
இ) காகித உறவு ஈ) வாடா மல்லி

**2. தமிழக அரசின் பரிசு பெற்ற சு. சமுத்திரத்தின் சிறுகதைத் தொகுதி .............. .**

அ) குற்றம் பார்க்கில் ஆ) என் கதைகளின் கதைகள்
இ) பாலைப்புறா ஈ) மண் சுமை

**3. கர்நாடக மாநிலத்தின் வடமாவட்டத் தலைநகர்....................**

அ) பெங்களூரு ஆ) குல்பர்கா இ) கோலார் ஈ) மாண்டியா

**4. 'நிலவே நிலவே வா' என்பது போல் வட்டத்தட்டை நோக்கி கையாட்டியது...............**

அ) மூன்று வயது பெண்குழந்தை ஆ) ஒரு வயதுக் குழந்தை
இ) நாய்க்குட்டிகள் ஈ) எதுவுமில்லை

**5. தட்டில் இருந்த உணவு குறையக் குறைய கூடிக் கொண்டே இருந்தது..............**

அ) அவளது தாய்மை ஆ) அவளது இரக்கம்
இ) அவளது பசி ஈ) அவளது ஏக்கம்

**6. சமுத்திரம் வாழ்ந்த ஊரில் பிள்ளைகள் தாயை இப்படி அழைப்பார்கள்...............**

அ) வாளா போளா ஆ) நீங்க, நாங்க
இ) வளத்தம்மா, வளத்தம்மா ஈ) அம்மா, அம்மா

**7. தோட்டத்திலே பிரயோசனமில்லேடா சென்னப்பா இனிமேல் உனக்குச் சம்பளம் கிடையாது. யார் கூறியது?**

அ) எஜமானர் ஆ) ஜீப் அதிகாரி இ) தோட்டக்காரன் ஈ) பியூன்

**8. காணாததைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் தோட்டத்தில் வாழ்ந்த குடும்பம் சுவைத்த உணவு**

அ) வெஜிடபுள் பிரியாணி, சப்பாத்தி
ஆ) வெஜிடபுள் பிரியாணி, உருளைக்கிழங்கு பொரியல்
இ) சைவப்பிரியாணி, முட்டை
ஈ) சப்பாத்தி, சைவப்பிரியாணி

விடைகள் :
1. ஆ) வேரில் பழுத்த பலா
2. அ) குற்றம் பார்க்கில்
3. ஆ) குல்பர்கா
4. ஆ) ஒரு வயதுக் குழந்தை
5. அ) அவளது தாய்மை
6. அ) வாளா போளா
7. அ) எஜமானர்
8. ஆ) வெஜிடபுள் பிரியாணி, உருளைக்கிழங்கு பொரியல்

## மதிப்பீடு - புத்தக வினா

### நெடுவினா

கேள்வி எண்: 2

**2. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.**

**முன்னுரை :**

தாய்மை சாதி மதம் பேதம் அறியாது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் வேறுபாடு அறியாது. தாய்மைக்கு உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் சமம்தான். அப்படிப்பட்ட வறண்டுவிடாத தாய்மையைப் பற்றி சு. சமுத்திரம் கூறுவதை இக்கதை வழி பார்ப்போம்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores





**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பது
உன் அன்பைக் கருணையை
மனிதாபிமானத்தை
உண்மை வெளிப்பாட்டை
தவிர வேறு எதுவுமில்லை
மனிதனிடம் நான்வேறு
நீ வேறு என்பது பொய்
நானும் நீயும் ஒன்றுதான்
நன்றியுணர்வில் என்பதை உணர்
அதுபோதும் எனக்கு.

1. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் வள்ளலார்.
2. இறைவனுக்குக் கொடுப்பது அடியவர்களுக்குப் போய் சேராது; அடியவர்களுக்குக் கொடுப்பது இறைவனுக்குப் போய் சேரும் என்றார் திருமூலர்.
3. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று மேடையில் பேசுவதை விட்டுவிட்டு உணவைக் கொடுத்து உயிரினங்களைக் காப்போம்.
4. உயிர் நேயமே மனித நேயம் என்பதை உணர்வோம், விலங்குகளை வளர்ப்போம்.

**செயல் திட்டம்**

**இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர் சிலரின் படங்களையும் கவிதைகளையும் திரட்டி, படக் கவிதைத்தொகுப்பு உருவாக்குக.**

**கேரம்**



அடித்தது
யார் என்றும்
தெரியாது
விழுந்தது
எங்கென்றும்
புரியாது
பாவம், மனிதர்கள்

– அப்துல் ரகுமான்

**ஆடி அடங்கும்**



ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண்மூடினால் காலில்லாக் கட்டிலடா!

– சுரதா



எதற்காக
நீ கஷ்டப்பட்டுக்
கோலம் போடுகிறாய்.
பேசாமல்
வாசலிலேயே
சிறிது நேரம் உட்கார்ந்திரு
போதும்.

– தபு சங்கர்

**வரலாறு**



அவள் ஒரு கண்ணாடி
அவளருகே சில கற்கள்
அவள் நேசிக்கும் கற்கள்
அவள் வெறுக்கும் கற்கள்
அவள் முன் பின் அறிந்திராத கற்கள்.

– லீனா மணிமேகலை

## நிற்க அதற்குத் தக

**நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால்...**

1. அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்.
2. இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
3. பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பேன்.
4. பரந்த அறிவுடன் இருப்பேன்.
5. தன்னைப்போல் பிறரை எண்ணும் மனப்பக்குவத்துடன் இருப்பேன்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. மனிதம் - Humane | 4. கட்டிலாக் கவிதை - Free verse |
| 2. ஆளுமை - Personality | 5. உவமையணி - Simile |
| 3. பண்பாட்டுக் கழகம் - Cultural Academy | 6. உருவக அணி - Metaphor |

## அறிவை விரிவு செய்

1. சிற்பியின் மகள் - பூவண்ணன்
2. அப்பா சிறுவனாக இருந்தபோது - அலெக்சாந்தர் ரஸ்கின்(தமிழில் நா.முகமது செரீபு)

☆☆☆

# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?
அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

2. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?
அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

3. இமயத்துக் <u>கோடு</u> உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

4. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை.
அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் - இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.
6. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
7. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.
8. குறுந்தொகை - பெயர்க் காரணம் எழுதுக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

9. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
10. பழங்களை விடவும் நசுங்கிப்போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
11. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'அக்கறை' தலைப்பில் உள்ள கவிதையை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளிக்க. (ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளாரின் வழி நிறுவுக.

14. "தாய்மைக்கு வறட்சி இல்லை" என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

☆☆☆



www.surabooks.com www.Padasalai.Net



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



# கூடுதல் கடிதங்கள்

**1. நீங்கள் வசிக்கும் பகுதியில் தண்ணீர் (நீர் தேக்கத்) தொட்டி அமைத்துத் தருமாறு நகராட்சி ஆணையருக்கு கடிதம் வரைக.** காலாண்டுத் தேர்வு 2019

நாமக்கல்
19-06-2021

**அனுப்புநர்:**
ஊர்ப்பொதுமக்கள்,
வெள்ளானூர், ஆவடி,
சென்னை - 54.

**பெறுநர்:**
உயர்திரு நகராட்சி ஆணையர் அவர்கள்,
ஆவடி நகராட்சி அலுவலகம்,
ஆவடி- 54.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** பகுதியில் தண்ணீர்(நீர் தேக்கத்) தொட்டி வேண்டுதல் சார்பாக.

வணக்கம். நாங்கள் வசிக்கும் வெள்ளானூர் பகுதியானது ஆவடி நகரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு ஏறத்தாழ முந்நூறு வீடுகள் உள்ளன. குடிநீர் பற்றாக்குறையால் பெண்கள் வெகுதூரம் சென்று தண்ணீர் பிடித்து வருகிறார்கள். மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள்

எனவே எங்கள் பகுதியில் தண்ணீர்(நீர் தேக்கத்) தொட்டி அமைத்து தரும்படி இப்பகுதி மக்கள் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
ஊர் பொதுமக்கள்,
வெள்ளானூர்.

**உறைமேல் முகவரி:**

| |
|---|
| **பெறுநர்** |
| உயர்திரு நகராட்சி ஆணையர் அவர்கள், |
| ஆவடி நகராட்சி அலுவலகம், |
| ஆவடி-54. |

**2. சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்.**

கும்பகோணம்,
20.06.2021

அன்புள்ள தந்தை அவர்களுக்கு,

வணக்கம்! இங்கு நானும் எனது நண்பர்களும் நலம். இதுபோல் அங்கு அனைவரின் நலமறிய ஆவல்.

நான் இங்கு நல்ல முறையில் படித்து வருகிறேன். நடந்து முடிந்த அரையாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ளேன். வரும் ஆண்டு இறுதித் தேர்விலும் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற முயன்று வருகிறேன்.

எங்கள் பள்ளியிலிருந்து கோவை, மேட்டுப்பாளையம், ஊட்டி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்குச் சுற்றுலா சென்றுவர ஏற்பாடு செய்து உள்ளனர். சுற்றுலாவில் கலந்து கொள்ள ஒவ்வொருவரும் ஆயிரம் ரூபாய் செலவிற்கெனத் தரவேண்டும் என்றும் அறிவித்துள்ளனர்.





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கூடுதல் கட்டுரைகள்

**1. முன்னுரை – கணினி வகைகள் – கணினிப் பயன்பாடு. காலத்தை வெல்லும் கணினி தலைப்பில் கட்டுரை வரைக**

காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

**முன்னுரை :**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி. சில நொடிகளில் மில்லியன் கணக்குகளைச் செய்து காட்டும். இது மனித மூளையைப் போன்று திறனோடு இயங்கும். இத்தகைய கணினியைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கணினியின் தோற்றமும், வளர்ச்சியும் :**

கணக்கிடுவதற்காக முதலில் எளிதான மணிச்சட்டகம் உருவாக்கப்பட்டது. இதுவே கணினி உருவாக படிவமாக அமைந்தது. 'பிளேஸ்பாஸ்கல்' என்ற அறிஞர் கணக்கிடு கருவியை கண்டறிந்தார். பிறகு இங்கிலாந்தைச் சார்ந்த 'சார்லஸ் பாப்பேஜ்' என்பர் கி.பி. 1833 இல் கணினியை வடிவமைத்தார். எனவே இவர் 'கணினியின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.

**கணினியின் வகைகள் :**

இன்றைய தகவல் தொழில் நுட்பக் காலத்தில் பல்வேறு வகையான கணினிகள் உள்ளன. அவை பல்லூடக வசதி கொண்ட கணினி, மடிக்கணினி, கையடக்க கணினி போன்றவையாகும்.

**இணையம் :**

இணையம் என்னும் வடிவத்திற்கு வித்திட்டவர் 'ஜான்பாஸ்டல் என்னும் அமெரிக்கர் ஆவார். உலகெங்கும் உள்ள செய்திகளை இணைக்க இணையம் பயன்படுகிறது. இணையம் வழியாக மின் அஞ்சல் அனுப்பவும், நேரில் உரையாடவும் முடியும். எனவே 'தமிழ் இணையம் பல்கலைக் கழகம்' ஒன்றை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

**இணையதள வசதி :**

பேரூர் முதல் சிற்றூர் வரை இணையதள வசதிகள் கிடைக்கின்றன. கணினி, தொலைபேசி, இணையச் சேவை வழங்குநர், மாற்றி தொடர்பு மென்பொருள் இவற்றைக் கொண்டு இணையதள வசதியை பெறலாம்.

**கணினியின் வியத்தகு செயல்கள் :**

இணையத்தின் வாயிலாக ஐயங்கள், சிக்கல்கள் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்ளலாம். மின்னஞ்சல் மூலம் செய்தி பரிமாற்றம் நிகழ்த்தலாம். 'தமிழம்' என்னும் இணையத்தளம் மூலம் தமிழ் எழுதவும், ஒலிக்கவும் கற்கலாம்.

**கணினி பயன்பாடு :**

கணினி, நம் அன்றாட வாழ்வில் இன்றியமையாத கருவியாகி விட்டது. எனவே தொலைத் தொடர்பு கல்வி, மருத்துவம், வேளாண்மை, வானிலை போன்ற பல்துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**உலகம் உள்ளங்கையில் :**

இந்நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியான கணினியும் இணையத்தளமும் தொலைத்தொடர்பு கருவிகளும் உலகத்தை நம் உள்ளங்கையில் கொண்டு வந்துள்ளது.

**முடிவுரை :**

அனைத்துப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி தரமாகக் கற்பிக்கப்படுகிறது. கணினி வாழ்க்கையில் உயிர்நாடியாகிவிட்டது. கணினியை ஆக்க வேலைகளுக்கு பயன்படுத்தி, வாழ்க்கையை வளமுடையதாக்குவோம்.

**2. முன்னுரை – சேமிப்பின் வகைகள் – சேமிப்பு பயன் – சொல்ல விரும்பும் கருத்து – முடிவுரை – சிக்கனமும் சிறுசேமிப்பும் கட்டுரை வரைக.**

அரையாண்டுத் தேர்வு 2019

**முன்னுரை :**

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது வள்ளுவர் வாக்கு நாம் வளமாக வாழப் பொருளை ஈட்ட வேண்டும். ஈட்டிய பொருளைச் சிக்கமானச் செலவு செய்தல் வேண்டும். தேடிய பொருளின் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். சேமிப்பின் பயன்கள் பற்றி இங்குக் காண்போம்.

**சேமிக்கும் வழிகள் :**

சேமிக்க முதலில் சிக்கனம் தேவை. விலைமலிவாக இருப்பினும் தேவையற்றவைகளை வாங்குதல் கூடாது. பிறர் மதிக்க ஆடம்பரமாகச் செலவு செய்தல் கூடாது. சிற்றறிவு உடைய எறும்பும், தேனீயும் கூடச் சேமிக்கின்றன. நாம் அஞ்சலகங்களில் சேமிக்கலாம். அங்கு நாம் சேமிக்கும் பணத்திற்குப் பாதுகாப்பும், வட்டியும் கிடைக்கிறது. மாணவர்கள் சஞ்சாயிகா திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். பேராசை பெருநட்டம் என்பது போல அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுத் தனியார் நிதி நிறுவனங்களை நம்பிப் பொருளை இழத்தல் கூடாது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அஞ்சலகங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவற்றில் சேமிப்பது பாதுகாப்பானதாகும்.

**சேமிப்பு பயன் – சொல்ல விரும்பும் கருத்து :**

"பணம் பத்தும் செய்யும்", "பணம் பாதாளம் வரை பாயும்" என்பன பணத்தின் தேவையை உணர்த்தும் பழமொழிகள். பணம் இல்லாதவரைப் பெற்றதாயோ, மனைவியோ விரும்பாள்; உலகம் அவனை மதிக்காது. எனவே பொருளைத் தேடிச் சேமிக்க வேண்டும். செலவு மூவகைப்படும். 1. உணவு, உடை முதலியவற்றிற்காகச் செய்யப்படும் அன்றாடச்


orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores

| 9ஆம் வகுப்பு | ஆண்டுப் பொதுத் தேர்வு - 2022 தமிழ் | தேர்வு எண் |
|---|---|---|
| நேரம் : 3.00 மணி | (வினாத்தாள் விடைகளுடன்) | மொத்த மதிப்பெண்கள் : 100 |

**குறிப்பு :** **விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். (வினா எண் 20 மற்றும் 34–க்கான விடை செய்யுள் வடிவில் மட்டுமே அமைதல் வேண்டும்.)**

## பகுதி – I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** (15 × 1 = 15)

1. தமிழ்விடு தூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள்
   ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
3. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது ?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை
   ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை
   ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
4. தீரா இடும்பை தருவது எது ?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல்
   ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
5. புறம் + நானூறு என்பது ..................... புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல்
   இ) தோன்றல் ஈ) கெடுதல்
6. ஐந்து சால்புகளில் இரண்டு ....................
   அ) வானமும் நாணமும்
   ஆ) நாணமும் இணக்கமும்
   இ) இணக்கமும் சுணக்கமும்
   ஈ) இணக்கமும் பிணக்கமும்
7. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
   **கூற்று :** பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஒள' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.
   **காரணம் :** சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி *
   இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி
8. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு. – ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது ?
   அ) நாள் ஆ) மலர்
   இ) காசு ஈ) பிறப்பு
9. தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் ................
   அ) திருக்குறள் ஆ) எட்டுத்தொகை
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
10. 1848–ல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் பணியாற்றிய முதல் பெண் ஆசிரியர் .........................
    அ) முத்துலெட்சுமி
    ஆ) மூவலூர் இராமாமிர்தம்
    இ) சாவித்திரிபாய் பூலே
    ஈ) மலாலா
11. பொதுவர்கள் பொலிஉறப்போர் அடித்திடும் நிலப்பகுதி....
    அ) குறிஞ்சி ஆ) நெய்தல்
    இ) முல்லை ஈ) பாலை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை எழுதுக :**

கல்வி இல்லாத பெண்கள்
　களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
　புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
　திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
　விளைவது நவில வோநான்!

12. இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் ................
    அ) சிறுபஞ்சமூலம் ஆ) குடும்ப விளக்கு
    இ) அழகின் சிரிப்பு ஈ) இராவண காவியம்
13. இப்பாடலின் ஆசிரியர் ..............
    அ) புலவர் குழந்தை ஆ) பாரதிதாசன்
    இ) திருத்தக்கதேவர் ஈ) ஆண்டாள்
14. களர்நிலம் – என்னும் சொல்லின் பொருள் ........
    அ) மலை ஆ) பண்படாத நிலம்
    இ) பண்பட்ட நிலம் ஈ) செழிப்பான நிலம்
15. **கல்வி இல்லாத பெண்கள்**
    **களர்நிலம் அந்நி லத்தில்**
    **புல்விளைந் திடலாம் நல்ல** - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயம்
    அ) எதுகை ஆ) மோனை
    இ) இயைபு ஈ) முரண்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample, Full Book Order Online www.CBSEtips.in
Available at All Leading Bookstores



**பகுதி – II (மதிப்பெண்கள் : 18) – பிரிவு – 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (4 × 2 = 8)

16. நீங்கள் பேசும்மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ?

17. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – குறிப்புத் தருக.

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது ?

19. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு ?

20. தலை – என முடியும் திருக்குறளை எழுதுக.

21. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர் ?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் :** (5 × 2 = 10)

22. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
   1. நீரின்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர்.
   2. ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5 ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

23. **சொல்லுக்குள் சொல் தேடுக.**
   அ) பாய்மரக்கப்பல் ஆ) தமிழ்விடுதூது

24. **மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**
   அ) கண்ணும் கருத்தும் ஆ) பசுமரத்தாணி போல

25. **கலைச்சொல் தருக :** அ) Volunteer ஆ) Humane

26. அறைந்தனர் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. **உவமைத் தொடரை உருவகத்தொடராக மாற்றுக.**
   தேன் போன்ற மொழியைப் பவளமாய் திறந்து பாடினாள்.

28. தமிழெண்களால் நிரப்புக.
   அ) உன்னுடைய (மாணவனின்) அகவை ........
   ஆ) மாணவனின் வீட்டு எண் ..................

**பகுதி – III – பிரிவு – 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும் :** (2 × 3 = 6)

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது ?

30. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
   இந்தியாவின் 11–வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர்; தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர். ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் இவர் இந்திய ஏவுகணை நாயகன் என்று போற்றப்படுகின்றார்.
   அ) இந்தியாவின் 11–வது குடியரசுத் தலைவர் யார் ?
   ஆ) ‘இந்திய ஏவுகணை நாயகன்’ என்று போற்றப்படுபவர் யார் ?
   இ) இவ்வுரைப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும் :** (2 × 3 = 6)

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை ?

33. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கத்தேவர் பாடியுள்ளார் ?

34. **அடிபிறழாமல் எழுதுக.**
   தித்திக்கும் தெள்அமுதாய்த்..... எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடல்
   (அல்லது)
   ஒன்றறிவதுவே எனத் தொடங்கும் உயிர்வகைப் பாடல்.

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும் :** (2 × 3 = 6)

35. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

36. **அலகிட்டு வாய்பாடு.**
   இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
   துன்பத்துள் துன்பங் கெடின்.

37. **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**
   அ) ............... பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)
   ஆ) .......... சிறந்தது (சால, மழ)
   இ) ............... விடுதும் (உறு, கடி)

**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :** (5 × 5 = 25)

38. அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், ‘கால் முளைத்த கதைகள்’ என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.
   (அல்லது)
   ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

39. (அ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக. (அல்லது)
   (ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com